# விடியல்

## The Dawn

இதழ்-85, மே-2016

கௌரவ ஆசிரியர்

முனைவர் வே. இராதாகிருஷ்ணன்

கல்லூரி முதல்வர்

ஆசிரியர்

முனைவர் சி. ஆர். சுரேஸ்

துறைத்தலைவர்

இணையாசிரியர்

முனைவர் ம.லோகேஸ்வரன்

ஆசிரியர் குழு

திரு. வீ. முருகானந்தம்

முனைவர் த. கண்ணன்

திருமதி. சு. சாந்தி

திரு. ப. ராஜேஷ்

முனைவர் து. சரஸ்வதி

முனைவர் பா. ராஜேஷ்

முனைவர் கோ. ரவிச்சந்திரன்

முனைவர் ந. சங்கீதா

திரு. செ. தங்கராஜ்

திரு. மு. சதீஸ்குமார்

முனைவர் சு. முப்பிடாதி

முனைவர் ப. பிரதிபா

திரு. சத்தியராஜ்

திரு.சிலம்பரசன்

## தலையங்கம் - உழைப்பாளர் நாள்

காலங்காலமாக இருந்துவரக் கூடிய ஒரே நோய் ஏற்றத்தாழ்வு. அதிலும் முதலாளி தொழிலாளி என்கிற பாகுபாடு தீராநோய். மனித வாழ்வில் ஏர்பின்னது உலகம் என்றார் வள்ளுவர். உழவன் சேற்றில் கால் வைத்தால் தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்பார்கள். மனிதன் மற்றவர்களை அடிமையாக்க நினைத்தே காலத்தைத் தள்ளுகின்றானோ என்கிற எண்ணம் அவ்வப்போது வருகிறது. பணக்காரன் ஏழையை உண்டாக்குகிறான். அறிவாளி முட்டாளை உண்டாக்குகிறான். பலம் படைத்தவன் கோழையை உண்டாக்குகிறான். இப்படி காலம் பல பாகுபடுகளை மிக இயல்பாக உண்டு பண்ணுகிறது. அவற்றில் முக்கியமான பாகுபாடுதான் முதலாளி – உழைப்பாளி. உழைப்பாளர்களின் முக்கியத் துவத்தைப் பாவேந்தன் நீங்களே சொல்லுங்கள் எனும் கவிதையில் குறிப்பிட்டிருப்பார்.

© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)

வெளியீடு:

தமிழ்த்துறை,

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

திருச்செங்கோடு–637215. தமிழ்நாடு, இந்தியா.

Fb: facebook.com/ksrcasthamizh.vidiyal

Blog: ksrcasthamizh.blogspot.in E-mail: vidiyalmagazhine@gmail.com

Website: ksrcas.edu

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher.

சித்திரச் சோலைகளே உமை நன்கு திருத்த இப்பாரினிலே முன்னர் எத்தனை மாந்தர்கள் ரத்தம் சொரிந்தனரோ உங்கள் வேரினிலே என்று உலகப் படைப்புகளுக்குப் பின்னால் உழைப்பாளர்களின் வியர்வை ஒளிந்திருப் பதை உணர்ச்சிப் பொங்க பாடியிருப்பார். ஆம் நாற்காலிகள் முதலாளிகளுக்கு என்றே ஆக்கப்பட்டதென யார் தீர்மானித்தது? உழைப்பாளிகள் காலம் முழுவதும் ஒரு வயிற்றுக் கஞ்சிக்காக வெறுந்தரையில் உட்கார்ந்தாக வேண்டிய அவல நிலையை உண்டாக்கியவர் யார்? இந்த நிலை எப்போது மாறும்? என்கிற பல கேள்விகளைத் தொழிலாளியாக நின்று யோசித்தால் இதன் வலி புரியும். தொழிலாளர்கள் நம் நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள். உழைப்பைச் சுரண்டுவதோடு உழைப்புகளுக்கேற்ற ஊதியங்களும் மறுக்கப்பட்டு வருகின்றன. விவசாயத்தை மறந்தும் விவசாயத்தை வெறுத்தும் மாற்று வேலைகளை புரிந்து வருவோர் ஏராளம். குலத்தொழில்கள் மறைந்து போயின. சிறு தொழில்கள், கைவினைத் தொழில்கள் இருக்கும் இடம் தெரியாமல் போய்க்கொண்டிருக்கின்றன. இந்த அவல நிலைக்கு யார் காரணம்? நாம் தான் நிச்சயமாக நாம் தான். நம்மில் பலர் பிராண்டட் என்ற பெயரில் அந்நியப் பொருட்களுக்கு எவ்வளவோ பணத்தைச் செலவளிக்கின்றனர். ஆனால் நம் நாட்டுக் கைவினைப்பொருட்களை வாங்க மறுப்பதோடு அலட்சியப் படுத்துகின்ற நிலை தான் நிலவி வருகிறது. உழைப்பாளிகள் தங்களுக்குத் தெரிந்த வேலைகளை முழு மனதுடன் செய்ய காத்திருக்கின்றனர். அவர்களை அங்கீகரிக்கத்தான் நாம் தயாராக இல்லை.சுதேசியப் பொருட்களைத் தவிர அந்நியப் பொருட்களை வாங்க மறுக்கும் நிலை ஏற்படும் பொழுது தான் உழைப்பாளர் களுக்கான உண்மையான மரியாதை கிடைக்கும். அதிநவீன அறிவியல் வளர்ச்சியின் காரணமாக மனிதன் பரபரப்பான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

பக்கத்து வீட்டாரின் நலனை விசாரிக்கின்ற நேரத்தில் 1000, 2000 சம்பாரித்து விடலாம் என்கிற எண்ண வோட்டத்திற்கு ஆளாகிறான். முதலினைப் போட்டுவிடுவதுடன் சரி. அதன் பிறகு என்ன நடந்தாலும் கவலையில்லை கல்லாப்பெட்டி நிறைய வேண்டும் என்றுதான் அனைத்து முதலாளிகளும் எண்ணுகின்றனர். அதற்காக காவு வாங்கப்படுபவர்கள் பாவப்பட்ட ஏழைத்தொழிலாளர்கள். அறிவியல் எவ்வளவோ வளர்ந்தாலும் ஓர் உழைப்பாளியின் உண்மையான உழைப்பிற்கு முன்னால் அத்துனை எந்திரங்களும் சற்றுத் தள்ளித்தான் நிற்க வேண்டும். உழைப்பாளி என்பவன் தன்னை மறந்து வேலை செய்பவன். ஆனால் குடும்பத்தை நினைத்துக் கொண்டு வேலை செய்பவன். உலகின் ஒவ்வொரு உழைப்பாளிக்குப் பின்னர் ஓர் ஆழமான வலி இருக்கும். அதைப் புரிந்து கொள்ள இன்னும் பல முதலாளிகளின் மனது முன்வரவில்லை.

**என் கடன் பணி செய்து கிடப்பதுவே** என்று திருநாவுக்கரசர் கோயில் கோயிலாக அலைந்தார். அதில் சமயப் பற்று இருந்தது. சமயப் பரப்பல் இருந்தது. எவ்வித பற்றும் இல்லாமல் தன் குடும்பத்திற்காகத் தன்னையே வருத்திக்கொள்கின்ற தொழிலாளிதான் நாட்டின் முதல் குடிமகன். தன் குடும்பத்தைக் காப்பாற்றுபவன் தன் நாட்டையும் காப்பாற்றுவான் என்பார்கள். இன்று தொழிலாளர்களைக் காப்பாற்றும் பணியில் இறங்கி அவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்கி சிறப்புச் செய்தாலே போதும் உழைப்பாளர்கள் தினத்தை உழைப்பாளர்களே கூக்குரலிட்டுக் கொண்டாடுவார்கள்.

========

# உள்ளுறை

1) கவிதைகள் --------------------------------------------- 1- 18

2) பழமொழி ------------------------------------------------ 08

3) வரலாறு ------------------------------------------------- 19


4) பிரியதர்ஷினி கவிதைகள்---------------------------- 26

5) சரண்யா கவிதைகள்-----------------------------------29



# நீங்களே சொல்லுங்கள்

சித்திரச் சோலைகளே உமை நன்கு
திருத்த இப்பாரினிலே முன்னர்
எத்தனை தோழர்கள் ரத்தம்
சொரிந்தனரோ உங்கள் வேரினிலே



நித்தம் திருத்திய நேர்மையினால் மிகு
நெல்விளை நன்னிலமே உனக்
கெத்தனை மாந்தர்கள் வெற்றி வியர்வை
இறைத்தனர் காண்கிலமே

தாமரை பூத்த தடாகங்களே உமைத்
தந்த அக்காலத்திலே எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே

மாமிகு பாதைகளே உமை இப்பெரு
வைய மெலாம் வகுத்தார் – அவர்
ஆமை எனப்புலன் ஐந்தும் ஒடுங்கிட
அந்தியெலாம் உழைத்தார்

ஆர்த்திடும் எந்திரக் கூட்டங்களே உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ? – நீங்கள்
ஊர்த்தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய்யல்லவோ?

கீர்த்தி கொள் போகப் பொருட் புவியே உன்றன்
கீழிருக்கும் கடைக்கால் – எங்கள்
சீர்த் தொழிலாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்

நீர்கனல் நல்ல நிலம் வெளி காற்றென
நின்ற இயற்கைகளே உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை?
தொழிலாளர் தடக்கைகளே!

தாரணியே! தொழிலாளர் உழைப்புக்குச்
சாட்சியும் நீயன்றோ? பசி
தீரும் என்றால் உயிர் போகும் எனச் சொல்லும்
செல்வர்கள் நீதி நன்றோ?

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ? இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ?

கிலியை விடுத்துக் கிளர்ந்தெழுவார் இனிக்
கெஞ்சும் உத்தேசமில்லை – சொந்த
வலியுடையார் இன்ப வாழ்வுடையார் இந்த
வார்த்தைக்கு மோசமில்லை..

**-பாரதிதாசன்**


# பைத்தியம் தான்

முழுமனதாய் ஒப்புக்கொள்கிறேன்
நான் கண்டிப்பாக பைத்தியம் தான்..
எப்படி சிந்தித்தாலும்
நான் பைத்தியம் என்பதைவிட்டு
என்னால் மீள முடியவில்லை..
நிச்சயம் கனவல்ல
பைத்தியத்திற்கான சாத்தியக்கூறுகள்
என் கண்முன்னே நடந்தேறிக்கொண்டிருக்கின்றன..
நடைபாதையில்
கழிப்பறையில்
பேருந்து பயணத்தில்
மொட்டை மாடியில்
கல்லூரி வளாகத்தில்
சந்தையில்
தியேட்டரில்
மருத்துவமனையில்
தியானக் கூடத்தில்
எனக்கான அடையாளங்களை தொலைத்துவிட்டு
எப்படி எப்படியோ திரிந்து கொண்டிருக்கிறேன்
நிச்சயம் இது நானல்ல
நானாகிப் போன நான்..



***அகரன்***

# பழமொழி



1) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

2) ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி

3) கடந்த காலம் திரும்ப வராது

4) கடவுளுக்கு அடுத்தபடி பெற்றோர்

5) கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

6) கடனைக் கொடுத்துச் சண்டையை விலைக்கு வாங்காதே

7) கடுகு போன இடம் ஆராய்வர். பூசனிக்காய் போன
இடம் தெரியாது

8) கடைத்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு
உடைக்காதே

9) கண்ணாடி மாளிகையில் இருந்து கல் எறியாதே

10) கத்தி முனையை விட பேனா முனையே சிறந்தது

11) கல்வி கரையில கற்பவர் நாள் சில

12) கல்வியே சிறந்த செல்வம்

13) கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை

14) காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு

15) காதலுக்குக் கண்ணில்லை

16) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

17) குரைக்கின்ற நாய் கடிக்காது

18) சிறு துரும்பும் பல் குத்த உதவும்

19) சிறு துளி பெரு வெள்ளம்

20) சுருங்கச் சொல்லி விளங்க வை

21) சூடு கண்ட பூனை அடுப்பாண்டை செல்லாது



22) செத்த பாம்பு கடிக்காது

23) செய்யும் தொழிலே தெய்வம்

24) செல்வம் செல்வத்தோடு சேரும்

25) செவிடன் காதில் சங்கு ஊதினாற் போன்று

26) சொல்வது வேறு. செய்வது வேறு27) சோம்பேறியின் நாக்கு சும்மா இருக்காது

28) தங்கப் பொதி சுமந்தாலும் கழுதை கழுதைதான்

29) தடியெடுத்தவன் தண்டல்காரன்

30) தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை

31) தருமம் தலைகாக்கும்

32) தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று

33) தனக்குப் போகத்தான் தானமும் தருமமும்

34) தனிமரம் தோப்பாகாது

35) தன் குற்றம் தனக்குத் தெரியாது

36) தன் கையே தனக்குதவி

37) தன் வினை தன்னைச் சுடும்

38) தாடி வைத்தவன் எல்லாம் தத்துவ ஞானியா?

39) தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை

40) தாரமும் குருவும் தலைவிதிப்படி

41) தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பதம் பார்க்காதே

42) தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்

43) தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்

44) திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன

45) திரைகடல் ஓடியும் திரவியம் தேடு

46) தீமையிலும் நன்மை உண்டு

47) துஷ்டனைக் கண்டால் தூர விலகு

48) தூங்குகிற புலியைத் தட்டி எழுப்பாதே

49) தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

50) தோல்வியே வெற்றிக்கு அடிப்படை

தொடரும் ….

*A.மேனகா*

*வணிகக் கணினிப் பயன்பாட்டியல் – இரண்டாமாண்டு*

## திருதிருமதி

*இரா.காவியா – தமிழ் இரண்டாமாண்டு*

பெண்ணாக வளரும்
ஓர் உயிர் நான்..
என்னைப் பார்த்தால்
மற்றவர்கள் சிரிப்பார்கள்
சிந்திக்க மறுப்பார்கள்
ஏன் என்னைப் பெற்ற
தாய் கூட என்னைப்
பாரமாகத்தான் நினைத்தாள்..
அரசு என்னை ஓர்
மனிதராகப் பார்த்தாலும்
இந்த உலகம் என்னை
தள்ளி வைத்து தான் பார்க்கிறது..
நான் பேருந்தில் உட்கார்ந்திருக்க
என் பக்கம் யாரும்
உட்காரவில்லை..
நான் மூன்றாம் பாலினம் என்றாலும்



நானும் பாலினம் தானே..?
எத்தனை நக்கல்கள்
எத்தனை ஏளனச் சிரிப்புகள்
எத்தனை இச்சைகள்
எத்தனை விலகல்கள்
எத்தனை பட்டப்பெயர்கள்
இன்னும்
எத்தனை எத்தனை கற்கள்
என்னை நோக்கி வீசப்படுகின்றன
தெரியுமா உங்களுக்கு..?
இதற்காக வருந்தப் போவதில்லை
என் வாழ்க்கையை
முடித்துக் கொள்ளப் போவதில்லை..
தொடர்வேன்
எனக்காகவும்
என்னைப் போன்றோர்க்காகவும்
என் பயணத்தைத் தொடர்வேன்
மிகுந்த துணிச்சலோடு...

## ஏணிப்படி

உதிரும் மலர்களை நினைத்து
செடிகள் பூப்பதை நிறுத்துவதில்லை
உருகும் தனக்காக வருந்தி
மெழுகுவர்த்தி ஒளிதர மறுப்பதில்லை
கண்ணீர் வருகிறதே என்று
கண்கள் காயம்படுவதில்லை

மனித வாழ்வின் தியாகங்கள்

அனைத்தும் வெற்றியின் ஏணிப்படிகளாகும்..

*மு.சபானாபேகம்*

*கணிதவியல் – மூன்றாமாண்டு*

## நட்பு

பிறக்கும் போது நண்பன்

என்று யாரும் இல்லை

ஆனால் இறக்கும் போது

நண்பனைத் தவிர

வேறு யாரும் இல்லை

## தனிமை

நம்மை நேசித்தவர்கள்

தன்னோடு இல்லாத

தருணத்தில்

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்

நாம் தேடுவது

தனிமையை மட்டும்தான்..

*M.ரம்யா*

*கணிதவியல் - மூன்றாமாண்டு*

## மை

நாட்டிற்குத தேவையான மை புதுமை

நாட்டைவிட்டு அகற்ற வேண்டிய மை வறுமை

மனிதனுக்குத் தேவையான மை பொறுமை


மனிதனின் மனதைவிட்டு அகற்ற வேண்டிய மை பொறாமை
பல மனிதர்கள் புகழ்பெறக் காரணம் எளிமை
அதனால் அவர்களுக்குக் கிடைத்ததோ பெருமை
வாக்களிப்பது என்பது நம்முடைய கடமை
அதுவே ஒவ்வொருத்தரின் அடிப்படை உரிமை
பெண் இனத்திற்குப் பெருமை சேர்ப்பது தாய்மை
அந்த தாய்மைக்கு மற்றொரு பெயர் தூய்மை
ஆம், அனைவரின் வெற்றிக்குக் காரணம் திறமை

**மா.விஜய் ஆதித்யா**

## விடியலை நோக்கி

மானிடா! எழுந்திரு
இதோ பொழுதும் புலரந்துவிட்டது என
அழைப்பு விடுப்பது போன்றுதான்
விடியலை நோக்கிக் கோழியும் கூவுகின்றது..
சோகத்திலே சுழன்றும் சொந்தங்கள் இல்லாதும்
சுகத்தினையே அறியாது சுதந்திரமாய் வாழாது
துன்பத்திலே மூழ்கி
துயர்கடலிலே ஆழ்ந்து கிடக்கும் ஏழைகள்
விடியலை நோக்கி
விடியலை எண்ணி
அவர் காணும் கனவு நனவாக வேண்டும்
வேலையில்லாக் காரணத்தால்
விவேகமற்று
அன்பற்று சூழ்நிலையால் துயருற்று
அறியாமல் தெரியாமல்

ஆராய்ந்து பாராமல்
எதிர்காலம் இருண்டு விடுமே
என்று யோசியாமல்
இன்றைய இன்பத்தையே பெரிதும் விரும்பி
போதை என்னும் அரக்கனிடம்
சிக்கித் தவிக்கும் இளைஞர் வாழ்விலே
அவர்கள் விடியலை நோக்கி எடுத்து
வைக்கும் சீரான பாதையிலே
சிறக்கும் வெற்றிகள் குவியட்டும்
அவர்கள் வாழ்வும் மலரட்டும்..



வரதட்சனை என்னும்
தீராக்கொடுமையால்
பல முல்லை மலர்கள் மலரந்து
மணம் வீச முடியாமல்
மனம் கலங்கி வாடுகின்றனவே
அந்தோ
தன் வாழ்விலே ஓர் வசந்த முல்லை
வளமுடன் வளர்ந்து
வனப்புடனே வலம்வராதா
என ஏங்கி விடியலை நோக்கி
தவம் கிடக்கும் தாமரை மொட்டுகள்
மனம் தளர்ந்து போகா வண்ணம்
அவர்தம் வாழ்விலே ஓர் விடியல்
ஏற்படட்டும்..
சாதி இரண்டொழிய வேறில்லை எனத்
தங்கத் தமிழ் தாண்டவம் ஆட

அழகாய் சொல்லிய
நம் அருந்தமிழ்ப் புலவரின்
பொன்னுரையை இப்புவியில் உள்ளோர் ஏற்கலையே..
தலைவிரித்தாடும்
இச்சாதிக் கொடுமையைத்
தகர்த்தெறிய நம் சமுதாயத்திற்கு
அவசியம் ஓர் விடிவு தேவை..
இதோ இதற்கு வடிகாலாய்
பார்ப்பனரை அழைத்து
பஞ்சாங்கம் பார்த்து
குருக்களை அழைத்து
விருப்பமில்லாப் பெண்ணுக்கு
வேண்டுவன செய்து
அக்னி சாட்சியாய் மனமேடையில்
அமரவிருக்கும் இக்கட்டான நிலை
இனிமேல் மாற
புது வசந்தமாய் அவள் பூத்துக் குலுங்கிட
இப்போது நம் சமுதாயத்திற்குத் தேவை
கலப்புத் திருமணமே
அதை நடைமுறைக்குக் கொண்டு வருவது மிக அவசியமே
நாடு நல்ல நாடு.. எங்கும்
நாவலர் பாவலர் புகழும் நாடு
பாரு நல்லா பாரு எங்கும்
சண்டை சச்சரவு பாரு
எனக் கேலிக் கூத்துக்கு இடமாகிப்போனது
மூடத்தனத்தின் முடநாற்றம் வீசுகின்ற

இச்சமுதாயம் காடு மணக்க வரும்
கற்பூர பெட்டகமாய் மாற
விழிப்புடன் எதிர்நோக்கிக் காத்திருக்கும்
மனிதர் வாழ்விலே
காலத்திற்கேற்ற மாற்றமும்
அம்மாற்றத்தை ஏற்றும் மனப்பான்மையும்
விடியலை ஏற்படுத்தும் மனிதர்களை
வெளிச்சத்திற்கு அழைத்துச் செல்லும்
மனமார்ந்த வெற்றிகளை
மகிழ்வுடனே அள்ளிக் கொடுக்கும்..
ஒன்றல்ல இரண்டல்ல
ஒவ்வொருடைய வாழ்வும்
ஓராயிரம் விடியல்களை
எதிர்நோக்கித்தான் காத்திருக்கிறது
இது ஒரு முடிவிலாத் தொடர்கதை
எனும் நிலை மாறி
புதியதொரு விடியலை நோக்கிப் பயணிக்க
நம் கால்கள் ஆயத்தமாகட்டும்...

*முனைவர் ந.சங்கீதா*
*தமிழ் – உதவிப் பேராசிரியர்*


## சொல்லுங்கள் பார்க்கலாம் - 1

1) அலெக்ஸாண்டரின் ஆசிரியர் யார்?

அரிஸ்டாட்டில்

2)உலக அறிவியல் தினம் என்ன?

பிப்ரவரி 28



3)பூக்காமல் காய்க்கும் மரங்கள் எவை?

பலா, அத்தி, ஆலமரம்

4)இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் யார்?

ராகேஷ் சர்மா

5)கடல்வாழ் உயிரின ஆராய்ச்சி மையம் எந்த நகரில் உள்ளது?

பரங்கிப்பேட்டை

6)கோலா கரடியின் உணவு எது?

தைல மரத்தின் இலைகள்

7)அதிக வெப்பத்தை அளக்கும் முறை எது?

பைரோமெட்ரி

8)செயற்கை முறையில் தயாரிக்கப்படும் தனிமம் எது?

புளூட்டோனியம்

9) ஜோக் நீர்வீழ்ச்சியின் உயரம் என்ன?

830 அடிகள்

10)அரண்மனைகளின் நகரம் என்றழைக்கப்படுவது எது?

கொல்கத்தா

*தொகுப்பு – ச.மதுரா*

***கணிதவியல்-இரண்டாமாண்டு***

## சொல்லுங்கள் பார்க்கலாம் - 2

1)மக்சேசே விருது வென்ற முதல் இந்தியர் யார்?

வினோபா பாவே

2)நோபல் பரிசு வென்ற முதல் பெண்மணி யார்?

செல்மா லாகர்லவ்

3)ஆஸ்கர் விருதை வென்ற முதல் இந்தியர்?

பானு அத்தையா

4)ஆல்டர்நேடிவ் நோபல் பரிசு எனப்படுவது யாது?

ரைட் லைவ்லிஹீட்

5)மிஸ் வேர்ல்டு 2007 பட்டம் வென்றவர் யார்?

ஷாங் ஜிலிங் (சீனா)

6)ஆஸ்கர் விருதுகளை அதிக அளவில் வென்றவர் யார்?

வால்ட் டிஸ்னி

7)2004 ஆம் ஆண்டு நெல்சன் மண்டேலா விருதினைப் பெற்றவர்?

மார்கரெட் ஆல்வா

8)2007 ஆம் ஆண்டின் மக்சேசே விருது பெற்ற இந்தியர் யார்?

பி.சாய்நாத்

## தாயின் அன்பு

என்னைப் பெண் என்றபோதும்
உன் தந்தை
என்னைத் துணை என்றபோதும்
துடிக்காத உள்ளம்
நீ என்னை அம்மா என்றழைத்த
போது
துடிதுடித்தது..
நீ அருகிலிருக்கும் போது
பைரவி ராகம் செவித்தது..
என்னை விட்டு
விலகிய பின் சோக
கீதம் கேட்டதே..
அதை நீ உணர வேண்டும்
மகளே

பிறப்பு எப்படி என்பதை
நான் பிறந்து
உணரவில்லை..
உன் பிறப்பால் தானடி
நானுணர்ந்தேன்..
நீ என்னை நினைத்தாயா
என்று எனக்குத் தெரியாது
ஆனால் நான்
உன்னைத் தவிர வேறு எதையும்
நினைக்கவில்லை
நினைவைக் கொடுத்த
ஆண்டவன்
நிம்மதியைக்

கொடுக்க மறந்து விட்டான்
போலும்..
விழிகளைக் கொடுத்த
ஆண்டவன்
அதில்
பார்வையைக் கொடுக்க
மறந்து விடுகிறான்..
ஆனால்
உன்னைக் கொடுத்த ஆண்டவன்
சிறிதேனும்
உன் நினைவைக் கொடுக்க
மறந்ததில்லை..
நான் சிரித்தால்
சிரிப்பதற்கு என்னுடன்
நீ இல்லை என்றாலும்
நீ அழுதால்
உன் கண்ணீரைத் துடைக்க
நிச்சயம் நான் வருவேன்..
உன் வளர்ச்சியில்
உன் புன்னகையில்
உன் முயற்சியில்
என்றும் வற்றாத நதியாக
உன் அன்புத் தாய்..!

***து.காயத்ரி***
***வேதியியல் - இரண்டாமாண்டு***

## சிங்களவர் – ஊரும் பேரும்

திராவிட மானுடவியல் எனும் நூலின் ஆசிரியரான பக்தவத்சல பாரதி இந்நூலில் திராவிடர்க்கும் சிங்களவர்க்கும் உள்ள உறவுமுறைகளை ஆராய்ந்து வருகிறார். அதைப் பற்றி விரிவாக சுவாரசியமுடன் விளக்கியுள்ளார். இவர் பண்பாட்டு மானிடவியல் தமிழர் மானிடவியல், தமிழகப் பழங்குடிகள் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். 1985 முதல் ஐந்தரை ஆண்டுக்காலம் தமிழ்ப் பல்கலைக்கழத்தில் பணியாற்றியவர். 1990 முதல் புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றிவரும் இவர் தற்போது இந்நிறுவனத்தின் இயக்குநராகவும் விளங்கி வருகிறார். அதே போல் இவர் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களை இனவரைவியல்

நோக்குடன் ஆராய்ந்த இலக்கிய மானிடவியல் எனும் நூலினை எழுதியுள்ளார். இதில் இவர் திராவிட மானிடவியல் எனும் நூலில் சிங்களவர்களைப் பற்றியும் உறவுமுறைகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அதைப் பற்றிக் காண்போம்.

சிங்களவர் இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பகுதிக்கு அப்பால் உள்ள இலங்கையில் இந்திய – ஆரிய மொழி பேசுபவர்கள். இந்திய – ஆரிய மொழியினைப் பேசினாலும் திராவிட உறவுமுறைச் சொற்களைக் கொண்டிருப்பவர்கள். 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கில காலனி ஆட்சியாளராக வந்த காட்ரிங்டன் என்பவர் சிங்களவர்கள் மொழியால் இந்தோ – ஆரிய மொழியைப் பேசுகின்றனர். மதத்தால் பௌத்தத்தைப் பின்பற்றுகின்றனர். பண்பாட்டாலும் சமூக அமைப்பாலும் தென்னிந்திய முறையைப் பின்பற்றுகின்றனர் என்று குறிப்பிடுகின்றார்.சிங்கள மக்கள் பன்னெடுங் காலமாகப் பின் பற்றிவரும் உறவுமுறையை நூர் யால்மன் எனும் மானிடவியல் அறிஞர் போதி மரத்தடியில் எனும் தலைப்பில் ஆராய்ந்திருக்கிறார் என்றும் இவரைப் போலவே ஸ்டிராட், ரொபின்ஸ் போன்றோரும் இதனை ஆராய்ந் துள்ளனர்.இவ்ஆய்வுகளின் வழியாக சிங்கள மக்களின் உறவுமுறைச் சொற்கள், திருமண முறைகள், மணக்கொடை முதலானவற்றை அறியமுடிகிறது.

முத்தா – பாட்டன் (தாத்தாவின் அப்பா)

சியா – தாத்தா (அப்பாவின் அப்பா, அம்மாவின் அப்பா)

ஆச்சி, ஆத்தா – பாட்டி (அப்பாவின் அம்மா, அம்மாவின் அம்மா)

கிரியாத்தா, அத்தப்பா – அப்பாவின் அப்பா

கிரியம்மா, அத்தம்மா- அப்பாவின் அம்மா

அப்பா, அப்புச்சி, தாத்தா, பியா, லொகுதாத்தா, லொகு அப்பா, மஹா அப்பா – சொந்த அப்பா, பெரியப்பா

அம்மா, மவு – சொந்த அம்மா

லொகு அம்மா – அம்மாவின் மூத்த சகோதரி

குட அம்மா- அம்மாவின் இளைய சகோதரி

மஹா அம்மா –பெரியம்மா

ஐயா – அண்ணன்

லொகு அய்யா – மூத்த அண்ணன்

பொடி அய்யா – இளைய அண்ணன்

அக்கா – அக்கா (மூத்த சகோதரி)

லொகு அக்கா – மூத்த அக்கா

மத்தியம அக்கா – பெரிய அக்கா

மல்லி – தம்பி

நங்கி – தங்கை

நானா – மைத்துனி

பானா – மருமகன்

பவுலா, கனு – மனைவி

மினிஹ – கணவன்

புதா – மகன்


துவா – மகள்

முனுபுரா – பேரன்

மினிபரி – பேத்தி

சகோதரி – சகோதரி

சகோதரா – சகோதரன்




சிங்கள மக்களின் மேற்கூறிய பெரும்பான்மையான உறவுமுறைச் சொற்கள் திராவிட உறவுமுறைகளை அச்சுவார்த்தாற் போல் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.

*ம.நவீனா*

*தமிழ் – மூன்றாமாண்டு*

# குழந்தைகள்

மாசற்ற குழந்தைகள்
இந்திய தாய்த்திரு நாட்டின்
வருங்கால விழுதுகள்
பாரதத் தூண்கள்
மூன்றாம் கண்கள்
சிறந்த தலைமகன்கள்
ஒளி விளக்கு என்றெல்லாம்
புகழ்பாடிய சான்றோரே
வாட்ஸ் அப்பில் பாருங்கள்
புகைக்கும் சிறுவர்களாய்
குடிக்கும் பாலகர்களாய்
கயவர் பிடிக்குள்
சிக்கிய மழலைகளாய்
சோற்றுக்கு அலையும் கூட்டங்களாய்
மழலைத் தொழிலாளர்களாய்
பெற்றோரும்
மற்றோரும் எங்கள்
மனக் காயங்களுக்கு
மருந்திடாவிட்டாலும்
தவறென்று உணர்வது எப்போது?
கலாம் கண்ட கனவு
நிஜமாவது எப்போது?
மாசற்ற குழந்தைகளாய்



எங்களை வழிநடத்துங்கள்
சோதனைகளை நசுக்கி
சாதனைகள் படைக்கின்றோம்..

*ம.ரஞ்சிதா*
*தமிழ் – முதலாமாண்டு*

## எழுத்தாணி - 5

ஒரு நல்ல நாளில் தலைவனுடன் சென்று இல்லறத்தைச் சீரும் சிறப்புமாக நடத்திவிட்டு பிறிதொரு நாளில் மீண்டும் தனது பிறந்த வீட்டிற்குத் தலைவி வருகின்றாள். அப்பொழுது தலைவியின் தோழி "ஏன்டியம்மா நீ வாழ்க்கைப்பட்டுப் போன உன் தலைவனது ஊரில் குடிப்பதற்கு ஒரு நல்ல தண்ணீர் கூட இல்லையாமே?" என்று தலைவியை நோக்கிக் கேட்கின்றாள். அதற்குத் தலைவி யார் சொன்னது என்று மறு வினா எழுப்பித் தனது தலைவனின் ஊர்ப்பெருமையை எடுத்துரைக்கிறாள். எப்படி என்கிறீர்களா?

**கவிதை வடிவம்**

உயிரினும் மேலான தோழியே
நான் கூறுவதைச் சற்று
செவிமடுத்துக் கேட்பாயா..?
ஆம் கொஞ்சம் விரும்பித்தான்
கேளேன் தோழி..!
என் தலைவனது நாட்டில்
வறுமை இருக்கிறதா
என்றெல்லாம் தெரியாது
ஆனால்
தண்ணீர் வற்றிய

ஒரு கிணற்றின்
அடிப்பகுதியை ஒருநாள் கண்டேன்
கிணற்றின் தாழ்வாரப் பகுதியில்
தழைகள் உதிர்ந்து
மூடப்பட்ட நிலையில்
சிறிதளவு தண்ணீருடன்
அந்தக் குழி காணப்பட்டது
அந்தச் சிறிதளவு தண்ணீரையும்
அங்கு அலைந்து திரிந்த
மானானது உண்டு
கலக்கிவிட்டுச் சென்றது..
அந்தக் கலங்கள் நீரை
எடுத்து நான் உண்டேன்
அடடா..
என்ன சுவை..
என்ன ஆனந்தம்..
உண்மையில் அந்தத் தண்ணீர்
நம் வீட்டின்
தோட்டத்தில் உள்ள
தேனை எடுத்து அதில்
பால் கலந்து
இனிமை என்று கூறுவாயே.?
அதைவிட பலமடங்கு
இனிமையுடையது
என் தலைவன் நாட்டில் உள்ள
கலங்கள் நீர்..!



இந்தக் கவிதைக்குரிய சங்க இலக்கியப் பாடலைப் பாருங்கள். ஐங்குறுநூற்றுப் பாடல் அது.

*அன்னாய் வாழி வேண்டன்னை நம்படப்பை*
*தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு*
*உவலைக் கூவற் கீழ*
*மானுண்டு எஞ்சிய கலுழி நீரே (ஐங்.குறிஞ்.203)*

<u>உரைவடிவம்</u>


அன்னையே! நான் கூறுவதை சற்று விரும்பிக் கேட்பாயாக. எம் தலைவனது நாட்டில் தாழ்ந்த பள்ளத்தில் சருகுகள் மூடப்பட்ட நிலையில் கிடந்த சிறிதளவு நீரினை அங்கிருந்த மான் ஒன்று கலக்கிவிட்டுச் சென்றுள்ளது. அந்தத் தண்ணீரை நான் உண்டபொழுது அன்றொரு நாள் நம் வீட்டுப் படப்பையில் கட்டியிருந்த தேனை எடுத்து அதனுடன் பால் கலந்து தருவாயல்லவா! அந்தச் சுவையினும் மிகுந்த சுவையுடையது.

**அருஞ்சொற்பொருள்**

படப்பை – வீட்டுத் தோட்டம், உவலை – தாழ்ந்த (அல்லது) உலர்ந்த சருகுகள், கூவல் – நீர் பெறுதலுக்காக அகலப்பட்ட குழி, கலுழி – கலங்கள்

## பிரியதர்ஷினி கவிதைகள்

**<u>கிறிசல்</u>**
அவதரித்த இடத்தில்
அனைத்துக் குழவிகளும்
சுற்றத்தால் கொஞ்சி மகிழ
நான் மட்டும் ஏன்



இன்குபேட்டர் எனும் சிறையில்..?
என் சக தோழர்கள்
முதலாம் வகுப்பில் அமர
எனக்கு மட்டும் ஏன்
எல்.கே.ஜி..?
முயற்சிக்கேற்ற மதிப்பெண் கிடைத்தது
பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில்..
இருப்பினும் என்னை நோக்கித்
தொடுக்கப்பட்ட கேள்வி..
உனக்கெல்லாம் எதற்கு
இத்துனை மதிப்பெண்..?
என்னினும் குறைந்த மதிப்பெண்
எடுத்தோர்
உயிரியல் பிரிவை எடுத்தனர்
எனக்கு அது கிடைக்காமல்
என் உயிர் எடுக்கப்பட்டது..
வேதியியல் ஆய்வுக்கூடத்தில்
ஆதியிலேயே ஆய்வை முடித்தவள்
நான் என்றாலும்
என் பெயர் பாதிக்குப் பின்னர் தான்
இடம் பெற்றிருந்தது..
மாலை நேரக் கல்லூரிப் பேருந்து கூட
எனக்கு இடம் தரவில்லை
நின்றுகொண்டே பயணம்..
பள்ளி நாள் தோழிக்கு
பிறந்த நாள் வாழ்த்துச் சொன்னால்

அவளோ யார் நீ என்று அழகாக
ஆங்கிலத்தில் கேட்கிறாள்..!
இத்தனையும் பெரிய விசயமல்லதான்
ஆனால் இவைதான் என் வாழ்க்கையின்
ஓரத்தைக் கரித்துக் கொண்டிருக்கின்ற
கரையான்கள்..
ஆனாலும் பயணித்துக் கொண்டிருக்கிறேன்
புயல்காற்றின் பயத்தை அறியாமல்
மகிழ்ச்சியாய்த் தொங்கிக்கொண்டிருக்கும்
எட்டுக்கால் பூச்சி போல்..!

## துரோகம்

பிறந்த மண்ணைத்
தாய் வயிரா நெனச்சிருந்தா
செய்வோமா
மண்ணுக்குச் செய்வினையெனும்
துரோகத்த..?
அன்னை மொழிய
நாமெல்லாம்
அவசியம்னு நெனச்சிருந்தா
விடுவோமா
அந்நியத்தை நம் நாட்டில்
விளைச்சல் செய்ய..?
பெற்றோரின் பாசத்தைப்
புரிந்திருந்தா
விடுவோமா

அவர்களை முதியோர் இல்லத்திற்கு..?



கற்றுக்கொடுத்த
ஆசானை மதித்து ஒழுகி
நாமிருந்தா
தோணுமா அவர்களைக்
கடுஞ்சொல்லால்
ஏசி மகிழ..?
உயிர்கொடுக்கும் பெண்ணினத்தை
உயர்வாக நினைத்திருந்தா
தோணுமா அவ்வினத்தை
மானபங்கம் செய்ய..?
உடன்பயிலும் தோழிகளைச்
சகோதரிகளா
எண்ணியிருந்தா
உண்டாகுமா சிந்தனையில்
கெட்ட எண்ணங்கள்..?
இயற்கைகளுக்குச் செய்தோம்
துரோகம்
ஐம்புலன்களை அடக்காமல்
ஐம்பூதங்களுக்கும் செய்தோம்
துரோகம்..
உற்றார் உறவினர்
அத்துனை பேருக்கும்
செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்
துரோகம்..
உங்கள் மனதிற்குக் கூட

துரோகம் செய்துவிடுங்கள்
ஆனால்
உங்களை நம்பினோர்க்குச்
செய்துவிடாதீர்கள்..
ஏனென்றால்
துரோகம் கொலையினும் கொடிது..!

# சரண்யா கவிதைகள்

## சலவைத் தொழிலாளி

மொத்தக் குவியலாய் விழுந்த
மூட்டைத் துணிகளுக்கு மத்தியில்
ஆள்மாறிப் போகாமலிருக்க
ஆளுக்கொரு
அடையாளம் போடுகிறான்
அனைத்துத் துணிகளின்
ஆர்ட்டிஸ்டாய்..



பட்டு வகையும்
பருத்தி பாலிஸ்டர் துணியும்
வேட்டி சேலை
பேண்ட் சட்டையென
ரக வாரியாய்ப் பிரிக்கையில்
ரத்தமும் பிரிகிறது வேர்வையாய்..
சாயம் போகும் துணி
சாயம் போகாத் துணி
என்று சரமாரியாகப் பிரித்து
தன் தேகம் சாயம் போவதைக்

கண்டு கொள்ளாது உழைக்கிறான்
சலவைத் தொழிலாளி..
தோள் வலிமை தாங்கி
துணிமணிகளை நீர்த்துறைக்குச்
சுமந்து செல்கையில்
சுயவுருவம் பெறுகிறான்
சுமை தாங்கும் கழுதையின்
மறு ஜென்மமாய்..
சலவைத் தூளும்
சோடா உப்பும் கலந்திட்டு
ஆற்றங்கரையிலே
ஆயில் கறை வாழைக் கறை
வெற்றிலைக் கறை
காப்பிக் கறை என அழுக்குக் கறை போக
அக்கரையிலே அத்தனையும்
அடித்து வெளுக்கிறான்
மிகுந்த அக்கரையோடு..
அப்புறம் காயப்போட்ட துணி
காற்றில் பரக்காமல் இருக்க
கிளிப் மாட்டுவதோடு
அருகிலேயே காத்தும் கிடக்கிறான்..
கரிக்கங்குகள் நிறைத்து
கரிப்பெட்டியில் தேய்த்து
உருப்படிக்கு இருபது ரூபாய்
என்று கேட்டால் கடன் சொல்லிவிட்டு
கடந்து செல்கின்றனர் உயர்தட்டுக்காரர்கள்..

என்னதான் ஆண்டாண்டுக் காலமாய்
அடித்தடித்துச் சலிக்காமல்
துவைத்தாலும் அழுக்காகவே இருக்கிறது
வெளுப்பவன் பிழைப்பு..

## தேங்காய்

நீ சிவபக்தனா?
முக்கண்களுடன்
உச்சிக்குடுமியும்
வைத்துள்ளாய்..?



## விவசாயம்

விவசாயம் இந்தியாவின்
முதுகெலும்பு என்றார்கள்
அதனால்தான்
யாரும் திரும்பிப் பார்ப்பதில்லையோ..?

## கருப்பு

கருப்பு அறியாமையின்
அடையாளம்
எவன் சொன்னது?
கரும்பலகை
அறிவின் வெளிச்சமல்லவா..?

## பப்பாளி இலை

கைரேகை பார்க்கத்தான்
ஆசையோ?
அங்கை விரித்த
நங்கைக்கு..!

## இருவினா ஒரு பதில்

தலையில் குருதிப் பெருக
பேருந்தில் ஏறியவனுக்குக்
காத்திருந்தன இரு வினாக்கள்..
எங்கே செல்ல வேண்டும்?
நடத்துநரின் கேள்வி
எப்படி அடிபட்டது?
அடுத்தவனின் கேள்வி
இவனின் ஒரே பதில்
செங்கல்பட்டு..

## தண்டனை

தவறு ஏதும் செய்யாமலேயே
தண்டனை பெறுகின்றன
எலுமிச்சம்பழங்கள்..
வண்டிச் சக்கரங்களிலும்
ஈட்டிகளிலும்..

## செல்/லம்மா

தாலாட்டுப் பாடி தூங்க வைத்த
அம்மாவுக்கு
உன்னைப் போல் எழுப்பத் தெரியவில்லை
ஆம் செல்போன்கள் வெறும் அலாரங்கள் அல்ல
எழுப்ப மறந்த அம்மாக்களின்
மாற்று உருவங்கள்..